DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கண்ணன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) (Pw.9)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( 2வது எதிரி இறப்பு 1, 3 எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது அ.முக்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.05.2023ம் தேதியன்று கட்டனூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 7மணிக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, தர்மம் கிராமத்தைச் சேர்ந்த வயது 80 மதிக்கத்தக்க வீரபத்திரன் மகன் அம்பலவாணன் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று 13.00மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 12/2023 இதச பிரிவு 294(பி), 323, 336 உ/இ 4 ofTNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (அந்த முதல் தகவல்

அறிக்கை அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதன் அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் குற்றவியல் நடுவர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். அதன்பிறகு வழக்கு கோப்புகளை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எ.த.கு.வி–**

20.05.2023ம் தேதி புகார்தாரர் காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்தாரா என்றால் வாய்மொழியாக நொங்கு வெட்டுவது சம்பந்தமாக புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். புகார்தாரின் மகன் ஊருக்குள் பேசி கொள்வதாக சென்றுவிட்டார். பனைமரம் யாருடையது என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன், அது புறம்போக்கு நிலத்தில் உள்ள பனைமரம். அதனை யாரும் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நாள், நேரத்தில் அசா1டம் இருந்து புகார் மனு எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தவறி விழுந்த காயத்தை வைத்துக்கு கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சந்திரமௌலி (மருத்துவர்) (Pw.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of March 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.05.2023ம் தேதியன்று காலை 6மணியளவில் பணியில் இருந்தபோது 70 வயது மதிக்கத்தக்க தனலட்சுமி என்ற நபர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பு மற்றும் கல் கொண்டு தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதித்து சிகிச்சை அளித்தேன். அவரை பரிசோதித்தபோது அவரது மேல்புற

வயிற்றுப்பகுதியில் (EPIGASTRIC REGION) அழுத்தினால் உணரக்கூடிய அளவு வலி இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். ( **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அதே நாள், அதே நேரத்தில் 80 வயது மதிக்கத்தக்க அம்பலவாணன் என்ற நபர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் கம்பு மற்றும் கல் கொண்டு தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதித்து சிகிச்சை அளித்தேன். அவரை பரிசோதித்தபோது அவரது வலது மற்றும் இடது புற தொடையில் அழுத்தினால் உணரக்கூடிய அளவு வலி இருந்தது. அவரது இடது புற நெஞ்சு பகுதியில் அழுத்தினால் உணரக்கூடிய அளவு வலி இருந்தது. அவரை வெளிநோயாளியாக பாவித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

இரண்டு நபர்களுமே என்னிடம் சிகிச்சைக்கு வரும் முன்பு வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக விபத்து பதிவேட்டில் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். ஒரு கல்லை வைத்து எறிந்தால் உடலில் மேல்புற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். இரண்டு

நபர்களின் காயங்கள் தவறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.